தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை.

புதன்கிழமை, 1982 செப்டம்பர் 8,

ஆவணி 23, துந்துபி, திருவள்ளுவர் 2013,

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

நயனோடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு.

நீதியையும் நன்மையையும் விரும்பிப் பிறர்க்குப் பயன்பட வாழும் பெரியோரின் நல்ல பண்பை உலகத்தார் போற்றிக் கொண்டாடுவர்.

I. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

முன்னாள் இராணுவ வீரர்கள்.

*வினா எண். 21—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழக அரசு முன்னாள் இராணுவ வீரர்களை எந்தெந்தப் பணிகளுக்குப் பயன் படுத்த திட்டமிட்டுள்ளது?

(ஆ) இவ்வீரர்களை இரவு நேர ரோந்துப் பணிகளுக்கு பயன்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) முன்னாள் படை வீரர்களை மின்துறை மற்றும் மருத்துவத் துறைகளில் அவசரக் காலங்களில் பயன்படுத்துவதற்காக அத்துறைகளில் அனுபவம் உள்ள வேலையில்லாத முன்னாள் படை வீரர்களுக்குப் பயிற்சி அளிக்கலாம் என்று அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. மேற்கண்ட துறைகளில் அனுபவம் உள்ள முன்னாள் படை வீரர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக உள்ளதினால் இத் திட்டம் இன்னும் செயலாக்கப்படவில்லை.

(ஆ) 350 ஓய்வு பெற்ற முன்னாள் இராணுவ வீரர்கள் சென்னை மாநகரில் திருடு, கன்னக்களவு போன்ற குற்றங்களைத் தடுப்பதற்காக இரவு நேர ரோந்துப் பணிகளுக்கு 1980ல் நியமிக்கப்பட்டு அவர்கள் பணியாற்றி வருகின்றனர்.

இத் திட்டத்தை மாநிலத்தில் மற்ற நகரங்களுக்கு விரிவு படுத்துவதனை மேலே சொன்ன பரீட்சார்த்தத் திட்டம் எவ் விதம் செயல்படுகிறது என்பதனை மூன்றாண்டுகள் கண்காணிக்க வேண்டும் என்பதற்காக தற்சமயம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே. நாட்டிற்காக உழைத்த முன்னாள் ராணுவ வீரர் களுக்கும், அவர்களின் குடும்பத்தாருக்கும் உதவி அளிக்க சிறப்புத் திட்டம் ஏதேனும் அரசு வைத்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இது பற்றி தனிக் கேள்வி போட்டால் விரிவாக எடுத்துச் சொல்லலாம். முன்னாள் ராணுவ வீரர்களுக்கு பல்வேறு வகைகளில் சலுகைகள் அளிக்கவும், வேலை வாய்ப்பு வசதிகள் ஏற்படுத்தித் தரவும், அவர்களுடைய நலிந்த தன்மையைப் போக்குவதற்கு வழிவகை செய்யும் முறையில் பல திட்டங்களையும் அரசு தீட்டியுள்ளது. ஆகவே, தனிக் கேள்வி போட்டால் அது பற்றிய முழு விவரங்களையும் தெரிவிக்க இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, முன்னாள் ராணுவ வீரர்களுக்கு வேலை கொடுப்பதற்காக — அதாவது Pre-training Course ஏற்படுத்த லாம் என்று இதே மன்றத்திலே இதற்கு முன்னால் அறிவிக்கப் பட்டு இருக்கிறது. அப்படி வேலை கொடுக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். மேலும், அந்தத் திட்டத்தை அரசு இன்னும் வைத்து இருக்கிறதா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, முன் பயிற்சித் திட்டம் இருக்கிறது. மருத்துவத் துறை, மின் துறை ஆகியவற்றில் அனுபவம் பெற்றுள்ள முன்னாள் ராணுவ வீரர்களின் பெயர்கள் மாவட்டங்களில் இருந்து பெறப்பட்டன. மருத்துவத் துறையில் 24 பேர், மின் துறையில் 17 பேர் உள்ளனர் என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது. இப்படி மாவட்டங்களில் இருந்து பெறப்பட்ட விவரங்களை உள்நாட்டு பாதுகாப்புத் துறை இயக்குநருக்கு Director of Cilvil Defence அனுப்பி வைக்கப்பட்டது. அவர் முன்னாள் ராணுவ வீரர் களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பதால் பயிற்சித் திட்டத்தை செயலாக்கவில்லை. இருந்தாலும், மேற்கொண்டு அது தொடர்பாக பல்வேறு மாவட்டங்களில் இருந்து மேலும் விவரங்கள் சேகரித்து வருகிறோம். போதுமான அளவிற்கு பயிற்சி பெறுவதற்கு முன்னாள் ராணுவ வீரர்கள் முன்வருவார் களானால் இத் திட்டம் செயல்படுத்தப்படும்.

1982 செப்டம்பர் 8]

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முன்னாள் ராணுவ வீரர்களை அரசுத் துறையில் காவலர்களாகவோ அல்லது அரசு நிறுவனங்களில் காவலர்களாகவோ நியமிக்க அரசு ஆணை ஏதேனும் பிறப்பித்துள்ளதா? அவ்வாறு பயன்பெற்ற ராணுவ வீரர்களின் எண்ணிக்கையை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவரவர்களே, சென்னை மாநகரிலே இரவு நேர ரோந்துப் பணிக்காக 350 முன்னாள் இராணுவ வீரர்கள் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். சேலத்தில் 72 முன்னாள் இராணுவ வீரர்களை இரவு ரோந்துப் பணிக்கு நியமிக்கலாம் என்று 12—7—1982 அன்று ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மேலும் தனியார் நிறுவனங்களிலும் அரசு நிறுவனங்களிலும் காவல் பணிக்கு ஆட்களை நியமிக்கும்போது முன்னாள் இராணுவத்தினருக்கு முன்னுரிமை அளிக்கவேண்டுமென்று ஒரு செயற்குறிப்பு எல்லா நிறுவனங்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்காக முன்னாள் இராணுவ வீரர்கள் முகவரிப் பட்டியல் ஒன்றை அவர்களுக்கு அமைக்கப்பட்டிருக்கிற பிரிவு ஒன்று வைத்து வருகிறது. எந்தெந்த நிறுவனங்களிலிருந்து முன்னாள் இராணுவ வீரர்கள் தங்களுக்கு காவல் பணிக்கு வேண்டுமென்று கேட்கிறார்களோ அவர்களுக்கு அந்தப் பிரிவு அனுப்புகிறது. மொத்த எண்ணிக்கை எவ்வளவு என்று இப்போது சொல்லுவதற்கான குறிப்பு இல்லை.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, முன்னாள் இராணுவ வீரர்களை சென்னை மாநகரில் இரவு நேர ரோந்துப் பணிக்கு நியமித்திருப்பதாகச் சொன்னார்கள். நியமித்தும் இருக்கிறார்கள். இப்போது எத்தனை பேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்? அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய ஊதியம் மிகக் குறைவாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். அந்த ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இப்போது சென்னை மாநகரில் 350 பேர்கள் இரவு ரோந்துப் பணிக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பகுதி நேரப் பணியாளர்களாக இருப்பதால் மாதம் ஒன்றுக்கு 300 ரூபாய் ஊதியமாகத் தரப்படுகிறது. சேலத்தில் 72 பேர்களை நியமிக்க 12—7—1982 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டு, முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு மாதம் 250 ரூபாய் பகுதி நேரப் பணி ஊதியமாக வழங்கப்பட இருக்கிறது. பகுதி நேரப் பணியாக இருப்பதால் இந்த நிலையில் ஊதியத்தை உயர்த்த வாய்ப்பு இல்லை.